# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (வைகாசி-ஆனி) ஜூன் 2011 ஏர்-26, உழவு-6, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

தலைவர் : பரணி கே.பாலசுப்பிரமணி
துணைத்தலைவர்கள் : பி.சென்னியப்பன்
செயலாளர் : ஆர். செல்வராஜ்
இணைச்செயலாளர்கள்: எஸ்.ஆர்.இராஜேந்திரன்
Dr.கே.ஆர்.பி.சண்முகம்
பொருளாளர் : கே.கே. ரமேஷ்
தணிக்கையாளர் : ஆர். பாலச்சந்திரன்

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ஏ.கணபதி | எஸ்.சிவசாமி |
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | எம்.அமராபதி |
| ஆர். சண்முகவேல் | எஸ்.அன்பழகன் |
| எம். கார்த்திக் | சி.சர்வராஜன் |
| வி.பி.வீரப்பன் | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| ஆர்.இளங்கோ | கே.என்.தர்மராஜ் |
| பி.ரவி | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

பொருளடக்கம் - 1
தலையங்கம் - 2
கட்டிட நிதி - 3
குடும்ப விழா 2011 – 4
ஆண்டு விழா மலர் – 6
தீரன் சின்னமலை மாளிகை – 8
என்றும் நலமுடன் வாழ – 9
நீங்களும் நிர்வாகியாகலாம் – 12
கல்வி நிறுவனங்கள் – 15
தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சி – 16
உலகப்பொதுமறை தந்த திருவள்ளுவர் – 18
வாழைத்தண்டு கூட்டு – 20
மீனவர் மொழி – 21
கொங்கு திருமண மாலை – 22
நெல் ரகம் – 23
வாழ்த்துகிறோம் – 25
நூல் நயம் – 26
மணமகள் தேவை - 28
மணமகன் தேவை - 31

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்புள்ள கொங்கு சொந்தங்களுக்கு,

வணக்கம் ! தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகள் வெளிவந்து, 16-05-2011 அன்று புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது. தமிழக முதல்வராக மூன்றாவது முறை பதவியேற்றுள்ள மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கும், அவரது அமைச்சரவையில் பங்கு பெற்றுள்ள 33 அமைச்சர்களுக்கும் நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த எட்டுபேர் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர் என்பதோடு அவர்களுக்கு முக்கியத் துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது நமது சமுதாய மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய செய்தியாகும். இதற்காக தமிழக முதல்வர் மாண்புமிகு. செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கட்கு நமது சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஏ.செங்கோட்டையன், தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு சி.சண்முகவேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பி.பழனியப்பன், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே.பழனிச்சாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு கே.வி.ராமலிங்கம், சிறப்புத்திட்டங்கள் அமலாக்கத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி.வேலுமணி, வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு பி.தங்கமணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு வி.செந்தில்பாலாஜி ஆகியோர்க்கு சங்கத்தின் சார்பில் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ள கொங்கு சொந்தங்கள் திருவாளர்கள் பல்பாக்கி கிருஷ்ணன் (ஓமலூர்), பாஸ்கர் (நாமக்கல்), சம்பத்குமார் (திருச்செங்கோடு), தனியரசு (பரமத்தி வேலூர்), பரமசிவம் (பல்லடம்), நட்ராஜ் (காங்கயம்), கிட்டுசாமி (மொடக்குறிச்சி), வெங்கடாசலம் (பெருந்துறை), ரமணிதரன் (அந்தியூர்), சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), கே.தினகரன் (சூலூர்), எஸ்.தாமோதரன் (கிணத்துக்கடவு), எம்.கே.முத்துகருப்பண்ணசாமி (பொள்ளாச்சி), ஆறுக்குட்டி (கவுண்டம்பாளையம்), சேலஞ்சர் துரை (கோயமுத்தூர் தெற்கு), சக்ரபாணி (ஒட்டன்சந்திரம்) ஆகியோருக்கு நமது சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்தாலும், தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றியதற்காக நமது கொங்குச் சமுதாய வேட்பாளர்கள் நன்றிக்கு உரியவர்கள். உயர்ந்த லட்சியங்களும், சேவை மனப்பான்மையும் கொண்டு அரசியலிலும், பொதுவாழ்விலும் ஈடுபடுகின்றவர்கள் தேர்தல்களத்தில் வெற்றியையும், தோல்வியையும் ஒன்றாகக் கருதுவர் என்பதும், நாடு வளம் பெற, நலிந்தோர் வாழ்வு மேம்பட, சமுதாயம் சிறப்பு பெற்றிட தொடர்ந்து உழைத்திடுவர் என்பதும் வரலாறு நமக்குக் காட்டியுள்ள செய்திகள் என்பதை அனைவரும் அறிவோம்.

தேர்தல்கள் முடிந்துவிட்டன. தேர்தலின் போது ஏற்பட்ட மனமாச்சரியங்களை மறந்துவிட்டு, பொதுவாழ்வில் மக்களுக்குத் தொண்டாற்ற முனைந்துள்ள அனைவரும், தமிழகத்தை முன்னேற்ற, மக்கள் வாழ்வில் எல்லா வளங்களும் பெற்றிட உழைத்திடுவார்கள் என்று நம்புகிறோம்.

கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் உழைப்பதோடு, விவசாயிகளின் முன்னேற்றத்திற்காகவும், கொங்குச் சமுதாயத்தின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் தங்களால் இயன்றதைச் செய்திட வேண்டும் என அன்புடனும், பணிவுடனும் நமது சங்கத்தின் சார்பாக வேண்டுகோள் வைக்கிறேன்.

இந்த வருடம் ஆண்டுவிழா 14-08-2011 அன்று சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற உள்ளது. கொங்குச் சொந்தங்கள் அனைவரும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி,

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 62,77,183 |
| 1298 | | S.சசி மீனு LH | 1,000 |
| 1299 | | கிருத்திகாLH | 1,000 |
| 1300 | 0234 | P.பழனியாண்டி | 1,000 |
| 1301 | 0235 | S.கிருஷ்ணகுமார் | 1,000 |
| 1302 | 0236 | K.E.பிரபு | 1,000 |
| 1303 | 0237 | P.மோகன்குமார் | 1,000 |
| 1304 | 3470 | M.மணிகண்டன் | 1,000 |
| 1305 | | K.J.பூவிதா LH | 1,000 |
| 1306 | | R.திவ்யா LH | 1,000 |
| 1307 | | G.கிர்த்தினி LH | 1,000 |
| 1308 | | K.பாக்கியலஷ்மி LH | 1,000 |
| 1309 | | K.லீலாதேவி LH | 1,000 |
| 1310 | | D.கார்த்திக் GH | 1,000 |
| 1311 | | நிர்மலா தேவி LH | 1,000 |
| 1312 | | காஞ்சனா தேவி LH | 1,000 |
| 1313 | | சுவிசித்ரபானு LH | 1,000 |
| 1314 | | P.மாரப்பன் | 1,000 |
| 1315 | | T.P.சுப்ரமணியன் | 1,000 |
| 1316 | | S.சித்தார்த் GH | 1,000 |
| 11317 | | S.C.கிரி GH | 1,000 |
| | | மொத்தம் | 62,97,183 |

## 2011 ஆம் ஆண்டுக்கான, சாதனையாளர் விருது மற்றும் இளம் சாதனையாளர் விருது

சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெறும் குடும்பவிழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமைதேடித்தந்துள்ள சாதனையாளர்களுக்கு " கொங்கு சாதனையாளர்" விருதும், படித்துக்கொண்டு இருக்கும் போது தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதும் வழங்கப்பட உள்ளன. இந்த ஆண்டு குடும்ப விழா காமராஜர் அரங்கத்தில் 14-08-2011 அன்று நடைபெற உள்ளது. 2011 ஆம் ஆண்டிற்கான 'கொங்கு சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்குவதற்குப் பரிசீலனை செய்திட, தங்களுக்குத் தெரிந்த தங்கள் பகுதியைச் சார்ந்த சாதனையாளர்களின் விபரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜுன் 30ம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ஆர்.செல்வராஜ், செயலாளர்

❖❖❖❖❖

## 10 மற்றும், +2 மாணவர்களுக்குப் பணமுடிப்பு, பதக்கம்

2011 ஆம் ஆண்டு 14-08-2011 அன்று நடைபெறவிருக்கும் குடும்பவிழாவில் இவ்வருடம் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் மூன்று கொங்குச் சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிப்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கப்படும். விழாவிற்கு வந்துபோக பயணக்கட்டணம், தங்கும் வசதி போன்றவை அளிக்கப்படும். தகுதியுடைய மாணவ, மாணவியர் சங்கத்திற்கு ஜுலை 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் சமுதாயச் சான்றிதழ் நகல், மதிப்பெண் பட்டியல் நகல், புகைப்படம் ஆகியவை கட்டாயம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

- ஆர்.செல்வராஜ், செயலாளர்

❖❖❖❖❖

# குடும்பவிழா 2011
## கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி

17-07-2011 அன்று நடைபெறவிருக்கும் இந்த ஆண்டு குடும்பவிழாவை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மணிகளுக்கான கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி நடத்தப்பட உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த மூன்று கவிதைகளுக்கும், கட்டுரைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படுவதுடன் அவை செய்தி மடலில் பிரசுரிக்கப்படும். பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்றவர்கள் குடும்ப விழாவில் உரையாற்றுவார்கள்

**கட்டுரைப்போட்டி :–**

1. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
   'புதியதோர் உலகம் செய்வோம்"
2. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
   "ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்"

**விதிகள் :–**

அ) கட்டுரை இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஆ) சொந்தக் கையெழுத்தில் இருக்க வேண்டும்.

**கவிதைப்போட்டி :–**

3. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
   'பாரதி தாசன் காணும் தமிழகம்'
4. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
   'மலை வாழை அல்லவோ கல்வி'

**விதிகள்** :-

அ) கவிதை 12 வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஆ) சொந்தக் கையெழுத்தில் இருக்க வேண்டும்.
இ) இதுவரை வேறெங்கும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
கவிதை மற்றும் கட்டுரை வந்து சேரவேண்டிய கடைசி தேதி 10-07-2011

**அனுப்ப வேண்டிய விலாசம் :**

செயலாளர், கொங்கு நண்பர்கள் சங்கம், 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி தெரு, இராயப்பேட்டை, சென்னை- 600 0014.

**பேச்சுப்போட்டி :–**

1. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
'பாரதிதாசன் படைத்த பெண்கள்'
2. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
'தமிழுக்கும் அமுதென்று பெயர்'

**விதிகள் :–**

பேச்சு 5 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். பேச்சுப்போட்டி நடைபெறும் தேதி : 17-07-2011 காலை 9 மணி இடம் : வெள்ளிவிழா இல்ல அரங்கம், இராயப்பேட்டை, சென்னை - 14.

❖❖❖❖

# ஆண்டு விழா மலர் - 2011

## விளம்பர வேண்டுகோள்

அன்புடையீர்,

நமது சங்கம் சென்னையில் கடந்த 40 ஆண்டுகளாகப் பல்வேறு சமுதாயப்பணிகளை ஆற்றிவருவதையும், குறிப்பாக கொங்கு நாடு இல்லம், வெள்ளி விழா இல்லம் ஆகிய இரு கட்டிடங்களையும் கட்டி சென்னை வரும் நம்மக்கள் தங்கிச்செல்லவும், தங்கள் மேற்படிப்பு, பயிற்சிகளுக்காகச் சென்னை வரும் மாணவ மாணவிகள் தங்கி இருக்கவும் அர்ப்பணித்திருக்கிறோம் என்பதை அறிவீர்கள். மூன்றாவதாக சென்னை பீட்டர்ஸ் சாலையில் புதியதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள தீரன் சின்னமலை மாளிகையில் சென்னை வரும் நமது கொங்கு சொந்தங்கள் நவீன முறையில் தங்கிச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதிக மதிப்பெண்கள் பெற்று வசதி குறைவாக உள்ள மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறோம் என்பதும் நீங்கள் அறிந்ததே!

மேலும் நிரந்தர அறக்கட்டளைகளை அமைத்து, நமது சமுதாயத்தில் உன்னதமான பணிகளை ஆற்றி வருபவர்களுக்குக் கொங்குமாமணி விருது, பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்குச் சாதனையாளர் விருது, இளைஞர்களுக்கு இளம் சாதனையாளர் விருது மற்றும் கொங்கு வேளாண் சாதனையாளர் விருது ஆகிய விருதுகள் ஆண்டு தோறும் வழங்கி வருகிறோம்.

2011ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ள கொங்கு மாமணிகள் மற்றும் சாதனையாளர்கள் ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்து அன்று நடக்கவிருக்கும் ஆண்டு விழா அன்று மலர் ஒன்றை வெளியிட இருக்கிறோம். இந்த ஆண்டு விழா மலரில் நமது சமுதாயத்தினர் பலரும் நடத்தி வரும் தொழில், வியாபாரம் மற்றும் கல்வி நிறுவனங்களைப்பற்றிய விவரங்களை அனைவரும் அறியும் பொருட்டு, வெளியிட விழைகிறோம்.

தாங்கள் இப்பெரும் முயற்சிக்கு உதவும் வகையில் இத்துடன் இணைத்துள்ள விளம்பர வேண்டுகோளைப்பூர்த்தி செய்து, தங்கள் நிறுவனத்தின் விளம்பரத்தையும், அத்துடன் கொங்கு நண்பர்கள் சங்கம் (Kongu Nanbargal Sangam) என்ற பெயருக்கு எடுத்த காசோலையையும் *, 01-08-2011 தேதிக்குள் வந்துசேருமாறு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மலர்க்குழு :

**கே.ஏ.கணபதி** **வி.பி.செங்கோட்டுவேல்**
**கே.கே.ரமேஷ்** **ஆர்.சண்முகவேல்**
**பி.சென்னியப்பன்** **கார்த்திக் எம்.முருகேசன்**
**எஸ்.சிவசாமி**

இப்படிக்கு
**பரணி கே.பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர்.செல்வராஜ்**
செயலாளர்

*** 80G Exemption available**

# ஆண்டு விழா மலர் - 2011

பெறுநர்

**ஆண்டு விழா மலர்க்குழு**

**கொங்கு நண்பர்கள் சங்கம்,**
“வெள்ளி விழா இல்லம்”
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Ph : 28351244, 28352744

வணக்கம்,

✔ குறிப்பிட்டுள்ள விளம்பர விவரத்தை 2008ம் ஆண்டு விழா மலரில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். விளம்பர விபரத்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| பின்பக்கம் | (வண்ணத்தில்) | ரூ.25,000 | ☐ |
| முன் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.20,000 | ☐ |
| பின் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.15,000 | ☐ |
| முழுபக்கம் ஆர்ட்பேப்பர் | (வண்ணத்தில்) | ரூ.10,000 | ☐ |
| முழு பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.5,000 | ☐ |

விளம்பரத்திற்குண்டான தொகை ரூ...................................... ஆன காசோலை / வரையோலை எண்............................ தேதி......................... வங்கியில் எடுத்து இத்துடன் இணைதுள்ளோம்.

அனுப்புநர்

.....................................................

.....................................................

.....................................................

கையொப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

## தீரன் சின்னமலை மாளிகை

நெ.72, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.




அன்பு கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம் !

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் மூன்றாவது மணிமகுடமான தீரன் சின்னமலை மாளிகை கடந்த பிப்ரவரி முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். சென்னை வரும் நமது கொங்கு சொந்தங்கள் இந்த மாளிகையில் தங்கி பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு


| | | |
|---|---|---|
| **பரணி கே.பாலசுப்பிரமணி** | **ஆர்.செல்வராஜ்** | **கே.கே.ரமேஷ்** |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

முன்பதிவு செய்ய தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் :

**044-2835 1744, 93821 55581**

# என்றும் நலமுடன் வாழ
# தொலையும் இளமையும், தோன்றும் முதுமையும்

கொங்குமாமணி டாக்டர். வி.எஸ்.நடராசன்
முதியோர் மருத்துவர்



இளமை – முதுமை, இரண்டிற்குமே மூன்று எழுத்துக்கள்தான். ஆனால் அப்பருவங்களில் ஏற்படும் மாற்றங்களும், நிகழ்வுகளும், விளைவுகளும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்!

ஒரு குழந்தை பிறக்கும் பொழுது எல்லோருக்கும் மகிழ்ச்சி. அது ஒரு புதிய வரவு. நம்பிக்கையின் எதிர்காலம். ஜொலிக்கும் வைரக்கல். உயர்கல்வி, உத்தியோகம், நல்ல வாழ்க்கை என்று எத்தனையோ எதிர்பார்ப்புகள்.

ஆனால் முதுமைப் பருவேமோ எதிர்ப்பார்ப்புகள் எதுமின்றி வாழ்க்கையின் கடைசி கட்டத்திற்கு வந்த நிலை. நம்மை அறியாமலேயே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முதுமையை அடைந்துவிடுகிறோம். முதுமையின் முடிவு மரணம். இது எல்லோரும் அறிந்ததே.

எல்லோருக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் மரணத்தை யார் வரவேற்கிறார்கள்? மரணத்தை நோக்கி அழைத்துச் செல்லும் முதுமையை வெறுக்கிறோம். ஆனால் முதுமை நம்மை வென்று விடுகிறது, மரணத்தின் மூலமான. இது முதுமையின் ஒரு பக்கம்.

முதுமை என்பது உடலின் வளர்ச்சி மட்டுமல்ல, அறிவின் வளர்ச்சி, அனுபவத்தின் வளர்ச்சி, பொறுப்புணர்வு ஆகியவை அடங்கியதே முதுமைப் பருவம். கடந்த பல ஆண்டுகளாக குடும்பத்திற்காக உழைத்து எல்லோரையும் கரை சேர்த்துவிட்டு இளைப்பாறும் இனிய காலம் அது. தனிமையில் இனிமை காணவும், பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும், பல இடங்களுக்குப் போய்வரவும், கிடைக்கப் பெற்ற பொன்னான பருவம்.

ஆகையால் முதுமைப் பருவம் என்பது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல! ஒரு பக்கம் வயதின் முதிர்ச்சி, அனுபவம், அறிவு. மறுபக்கமோ தள்ளாமை, கொடிய நோய், வறுமை, தனிமை, மரணபயம் போன்றவை.

முதுமை எப்பொழுது ஆரம்பமாகிறது? 50 வயதினிலா? இல்லை 60 வயதினிலா? இந்தக் கால நிர்ணயத்தை யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. ஏனென்றால், உடலில் ஏற்படும் மாற்றங்களும், உடல் உறுப்புகளின் செயல் திறன்களும், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கால கட்டங்களில் நிகழ்கின்றன. ஆகையால், நடைமுறை வசதிக்காக ஒருவர் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெறும் வயதை, முதுமைக் காலம் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. நம் நாட்டில் 60 வயதிற்கு மேல் உள்ளவர்கள் முதியோர்கள் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். எனினும் முதுமை நாம் பிறக்கும் பொழுதே தொடங்கி விடுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்!

- பாரம்பரியம் – முன்னோர்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்தால் அவர்கள் சந்ததியினரும் அவ்வாறே இருப்பார்கள்.

- வயது ஆக ஆக உடலில் உள்ள முக்கிய உயிர் அணுக்கள் குறைதல்.
- திறனற்ற உயிரணுக்கள் பெருகி வரும் தன்மை குறைதல்
- உயிரணுக்கள் பெருகி வரும் தன்மை குறைதல்.
- கழிவுப் பொருட்கள் உடலிலிருந்து வெளியேற்றப் படாமல் தங்கி விடுதல்.
- ஃப்ரிரேடிகல்ஸ் (Free radicals) என்ற திரவம் உடலில் அதிகம் சேர்ந்து மற்ற திசுக்களை அழித்தல்.
- உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஹார்மோன் (Growth hormone) குறைதல்.
- நமது மூளைப்பகுதியிலுள்ள பிட்யூட்டரி என்னும் நாளமில்லா சுரப்பி (Killer hormone) என்னும் திரவத்தைச் சுரக்கிறது. இந்த திரவம், ஒரு பெண் பூப்பெய்தும் பருவத்தில் சுரக்க ஆரம்பிக்கிறது. ஆகையால் ஒரு பென் பூப்படையும் வயது தள்ளிப்போனால் அவள் வாழும் வயதும் அதிகரிக்கும் என்ற ஒரு கருத்து உண்டு.
- தலையிலுள்ள மூளைப்பகுதியில் பீனியல் எனும் சுரப்பி Melotinin எனும் திரவத்தைச் சுரக்கிறது. இளமையைப் பாதுகாக்க அத்திரவம் மிகவும் அவசியம். ஆனால் ஒருவர் 25 வயதை அடையும் பொழுது இத்திரவம் குறைகிறது. ஆகையால் முதுமை அப்போதே தொடங்க ஆரம்பித்து விடுகிறது.

## முதுமையில் ஏற்படும் மாற்றங்கள்

| உடல் உறுப்புகள் | முதுமையில் ஏற்படும் மாற்றங்கள் | விளைவுகள் |
|---|---|---|
| நாக்கு | நாக்கிலுள்ள சுவை அரும்புகள் (Taste bunds) எண்ணிக்கையிற் குறைதல்; சுவையைக் கட்டுப்படுத்தும் நரம்பு மையமும் (Parietal lobe) தளர்ந்து விடுதல். | சுவை உணர்ச்சி குறைதல்; கடைசியாய்க் குறைவது உப்பு உணர்வே (Salt taste). |
| வாய் | வாயில் உமிழ் நீர் குறைதல் | வாயில் வறட்சி ஏற்படுதல் |
| இரைப்பை | அமிலம் குறைதல் | இரைப்பையிலிருந்து கிரகிக்கும் தன்மை இரும்புச் சத்தினைக் குறைத்தல். |
| சிறுகுடல் | இரத்த ஓட்டம் 40% குறைதல்; உணவினைக் கிரகிக்கும் பகுதியில் 30% குறைதல் | உணவு, மருந்துகளைக் கிரகிக்கும் தன்மை குறைதல். |
| பெருங்குடல் | சுருங்கி விரியும் தன்மை குறைதல். | மலச்சிக்கல் ஏற்படுதல். |
| கல்லீரல் | சுமார் 1/3 பங்கு எடை குறைதல் | செயல்திறன் குறைதல். |

| | | |
|---|---|---|
| மூளை | மூளை எடை குறைதல்; இரத்த ஓட்டம் 30% குறைதல். | மறதி அதிகம் ஏற்படுதல்; பக்க வாதம் எளிதில் வர வாய்ப்புகள் மிகுதி. |
| சிறுநீரகம் | சிறுநீரகத்திலுள்ள (Nephrons) நெப்ரான்கள் அதிக எண்ணிக்கையிற் குறைதல்; இரத்த ஓட்டம் 53% கழிவுப் பொருள்களைவெளியேற்றும் சக்தி 46% குறைதல். | சிறுநீரகம் எளிதில் செயல் இழத்தல் |
| இதயம் | இதயத்திலிருந்து வெளிவரும் இரத்தம் அளவு குறைதல்; நாடி வேகமும் குறைதல். | உடற்சோர்வு, மூச்சு திணறல் ஏற்படுதல். |
| சிறுநீர்ப்பை | ஆண்களுக்கு மட்டும் சிறுநீர்ப்பையில் உள்ள புராஸ்ட் (Prostate gland) எனும் சுரப்பி பெரிதாகிக் கொண்டே வருதல். | சிறுநீர் அடிக்கடி கழிதல்; சிறுநீர் செல்லும்போது அடைப்பு ஏற்படுதல். |
| ஹார்மோன் | பெண்களுக்கு மிக விரைவிலேயே குறைந்து விடுதல். | எடை கூடுதல், எலும்புகளின் வலிமை குறைந்து , எளிதில் எலும்பு முறிவு ஏற்படல். |

தொடரும்.......

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்




நமது சங்க உறுப்பினரும், சவிதா பல்கலைக் கழகத் துணைவேந்தரும், மற்றும் பல் மருத்துவருமான டாக்டர். ஆர். இராசகோபால் M.D.S. அவர்களுக்கு பல் மருத்துவர் நாளான 06.03.2011. அன்று பல் மருத்துவத்துறையில் செய்த சாதனைகளுக்காக தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' கொடுத்து கௌரவப்படுத்தியது. டாக்டர் இராஜகோபால் அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. இதுபோல் மேலும் பல விருதுகள் கிடைக்க சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# நீங்களும் நிருவாகியாகலாம்

சென்ற இதழ் தொடர்ச்சி ....

சிலம்பொலி சு. செல்லப்பன்

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

எனும் திருக்குறளை மனத்திற் கொண்டவனாய் ஓயாது உழைத்தேன். விடுமுறை நாட்களில் தனி வகுப்புகள். ஒவ்வொருவராக அழைத்து எது அவர்கட்குப் புரியவில்லையோ அதை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்தேன். அதன் விளைவு அந்த ஆண்டு பதினொன்றாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அவ் வகுப்பு மாணவர்கள் கணக்குப் பாடத்தில் பெற்ற சராசரி மதிப்பெண் 72. பதினைந்து ஆண்டுகள் கணித ஆசிரியராக உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் பணியாற்றியுள்ளேன். எந்த ஒரு தேர்விலும் எந்த ஒரு மாணவனும் 60,70 க்கு குறைந்து மதிப்பெண்கள் பெற்றது கிடையாது. வகுப்பில் பெரும்பான்மை 100க்கு 100 பெறுபவர்களாக விளங்கினர். இடைவிடா உழைப்பு எதையும் வெற்றியாக்கும். இதை மனத்திற்கொண்டு செயற்படுவோர்க்குத் தளர்ச்சியில்லை - வளர்ச்சியே உண்டு.

ஒரு சிறந்த நிருவாகிக்குச் சோம்பல் என்ற சொல் தெரியாத ஒன்றாக இருக்க வேண்டும். கடலில் மிதக்கும்படி ஒரு கப்பல் ஓவியத்தில் வரையப்பட்டால் அக்கப்பல் அதே நிலையில் தான் நிற்கும். அதனால் ஓட முடியாது. சோம்பேறி அக்கப்பற் படத்திற்கு ஒரு மாதிரி என்பார் Coleridge எனும் ஆங்கில அறிஞர்.

As idle as a painted ship
up on a painted ocean

என்று குறிப்பிடுவார்.

ஒரு தொழிலை நிருவகிப்பவர் அத்தொழிலின் எல்லா நுணுக்கங்களையும் அவரே நன்கு அறிந்திருக்க வேண்டும். அப்போது அவரை யாரும் ஏமாற்றமுடியாது. துணி தைக்கும் நிறுவனத்தில் நிருவாகியாக இருப்பவர் துணியை வெட்ட, தைக்க, பொத்தான் நுழைக்க, பிறை தைக்க ஆகிய அனைத்தையும் நன்கு அறிந்தவராக இருப்பின், அங்கு எவருமே அவரை ஏமாற்ற முடியாது. ஒருவர் அக்கறையின்றித் தைப்பவராக இருந்தால், அவரை எழச் செய்து, அவ்விடத்தில் தான் உட்கார்ந்து, இப்படி, விரைந்து லாவகமாகத் தைக்க வேண்டாமா என்று தைத்துக் காட்டுவாரானால், அத்தொழிலாளியின் அக்கறையின்மை அக்கணமே பறந்துவிடும்.

நான் கணக்குப் பாடம் நடத்தியவன். கணக்கில் நான் மேதை அல்லன். நான் படித்தபோது வளர்ந்து வந்த திராவிட இயக்கங்கள்பால் கொண்டிருந்த பற்றாலும், நான் படித்த கல்லூரியின் சூழ்நிலையாலும் பாடங்களில் என் எண்ணம் செல்லவில்லை. தட்டுத் தடுமாறித்தான் வெற்றி பெற்றேன். பி.ஏ.தேர்வில் கணிதத்தில் மூன்றாம் வகுப்பில்தான் தேர்ச்சி பெற்றேன். தேர்வில் மதிப்பெண் பெறுவது வேறு, பாடம் சொல்லித் தருவது வேறு. மாநிலத்தில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்று தங்கப் பதக்கம் பெற்றவர் வகுப்பில் பாடம் எடுக்க முடியாமல் தடுமாறுவார். இரண்டு மூன்று முறை தோற்றுப் பின்னர் பட்டம் பெற்ற ஒருவர், வகுப்பில் பாடம் நடத்தினால் மாணவர்கள் வாய்பிளந்து கேட்பர். பாடம் நடத்துவது என்பது ஒரு தனிக்கலை. என்னைக் கேட்டால் ஆசிரியப் பயிற்சிக்கு மதிப்பெண்களை அடிப்படையாக வைத்துத் தேர்ந்தெடுப்பதைவிட ஆசிரியராக விரும்புவோரை ஓராண்டுக் காலம் பயிற்சி பெறாத ஆசிரியராகப் பணியாற்றச் செய்ய வேண்டும். அந்த ஓராண்டில் அவர்களைக் கவனித்து ஆசிரியர் தொழிலில் அவர்கட்கு முழு ஈடுபாடு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டு அத்தகையவர்க்கே பயிற்சியளிக்க வேண்டும்.

அன்றன்று நடத்த வேண்டியவற்றை ஒன்றுக்கிருமுறை செம்மையாக அறிந்தும், கணக்குகளை போட்டுப்பார்த்தும் நன்கு நான் உணர்ந்த பின்னரே வகுப்புகட்குச் செல்வேன். முன்பே செய்த தொழிலாயிருந்தாலும், நன்கு பழக்கமுடையதாயிருந்தாலும் அன்றன்றும் புதிதாகச் செல்வது போன்ற பொறுப்புடன் பணிக்குச் செல்ல வேண்டும். இப்பொறுப்புடன் பணியாற்றிய காரணத்தால், மிகவும் செல்வாக்குப் பெற்றதாக கணிதச் செல்வம் எனும் பெயரில் 3 ஆம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரைக்குமான பாடநூல்கள் எழுதினேன்.

செய்யும் செயலின் நுணுக்கங்களை அறிவதோடு, அது பற்றி யார் யார் என்ன புதிய முயற்சிகளைச் செய்துள்ளனர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் அறியாத, மற்றவர் அது பற்றி அறிந்துள்ளவற்றையும் தேடித் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் அறியாத எத்தனையோ, ஏதாவது ஒன்றில் மறைந்திருக்கும். அவற்றையெல்லாம் தேடிக் கண்டறிந்து என்றும் நாம் முழுமை பெற்றவராக இருக்க வேண்டும்.

ஒன்றுக்கு உடனடியாகத் தீர்வு காண இயலாத நிலையில் மற்றவர்கள் அவ்வியலாமையை அறியாதவாறு சாமர்த்தியமாகச் சமாளித்துப் பின்னர் நன்கறிந்து அத்தீர்வைத் தரவேண்டும்.

இதற்கொரு நிகழ்ச்சி : நான் எப்போதுமே கணக்குகளை நன்கு அறிந்துகொண்ட பின்னரே வகுப்புக்குச் செல்வது வழக்கம். ஒரு நாள் தயாரிப்பின்றிச் சென்று விட்டேன்.

முன் நாள் ஒரு தேற்றத்தைப் போட்டு முடித்திருந்தேன். அன்று அதன்கீழ் கரும்பலகையில் 2 வரிகள் எழுதினேன். மேற்கொண்டு புரியவில்லை. என்ன செய்வது? தவறாகவே அக்கணக்கைப் போட்டு முடித்திருந்தாலும் கூட, ‘நீங்கள் செய்வது தவறு’ என்று சொல்வதற்கு எதிரில் ஆட்கள் இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன். வகுப்பின் ஓர் மூலையில் செவிந்திலிங்கம் என்ற ஒரு மாணவன் இயல்பாகவே குறும்புக்காரன். நான் பார்த்தபோது அருகிலிருந்த மாணவனிடம் வம்பு செய்து கொண்டிருந்தான். உடனே அவனை எழச்செய்து மாணவர்கள் இவ்வாறெல்லாம் நடக்கக்கூடாது; மாணாக்கர்களில் மூன்று வகை உண்டு. முதல் மாணாக்கன், இடை மாணாக்கன், கடை மாணாக்கன். முதல் மாணாக்கன் கற்பூரம் போன்றவன். நெருப்பு அருகில் சென்றவுடன் பற்றிக்கொள்வது போல ஆசிரியர் சொன்னவுடன் தெரிந்துகொள்வான். இடை மாணாக்கன், கரி போன்றவன். கரித்தூள் நெருப்பை வைத்துப் பலமுறை ஊதினால்தான் பற்றும். அதுபோல ஆசிரியர் பலமுறை எடுத்துச்சொன்னால் மட்டுமே அவனுக்குப் புரியும். கடை மாணாக்கன் வாழைத்தண்டினைப் போன்றவன். என்ன செய்தாலும் அதில் நெருப்புப் பற்ற வைக்க முடியாது என்றும் அதற்கு மேலும் அவனிடம் பேசியவாறே இருந்தேன். வகுப்பு முடிவதற்கான மணி அடித்தது. “உன்னால் இன்று ஒரு நல்ல கணக்குச் செய்வது தடைபட்டுப்போய்விட்டது. நாளை வந்து செய்வேன்” என விட்டால் போதுமென வெளியேறினேன். கணக்கில் என் மூத்த ஆசிரியர் திரு.வேங்கடசுப்ரமணியன் என்பவரது புத்தகத்தைத்தான் அன்று எடுத்துச் சென்றிருந்தேன். அவரிடம் சென்று “ஐயா, இந்தக்கணக்கை எவ்வாறு செய்வது” என்று கேட்டேன். அவர் சொன்னார், ‘உனக்கு எதற்கு ஐயா இதெல்லாம், ஏதோ தேற்றத்தை முடித்தோம், சில எளிய கணக்குகளைச் செய்தோம் என விட்டு வருவதுதானே” என்றார். அந்தக் கணக்கின் முன் ஒரு பெருக்கல் குறி இருந்ததால் “ஐயா, இது முக்கியம் எனக் குறித்திருந்தீர், அதனால்தான் எடுத்தேன்” என்றேன். ‘முக்கியம் என்பதற்காக இல்லை, எனக்குத் தெரியவில்லை என்பதற்காகத்தான் அவ்வாறு குறித்தேன்’ என்றார். பின்னர் பலரையும் கேட்டேன். விளக்கம் இல்லை. நூலகத்தில் ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் எழுதிய கணித நூல் இருந்தது. அதைப் புரட்டிக்கொண்டிருந்தபோது எந்தக் கணக்கைச் செய்ய நான் தடுமாறிக்கொண்டிருந்தேனோ அது அப்புத்தகத்தில் செய்முறைக் கணக்காக (Worked example) விளக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படைக்கொள்கை தெரியாததாலேயே இந்தத் தடுமாற்றம். ஆக ஒவ்வொன்றின் அடிப்படைக் தத்துவத்தை உணர்ந்து செயல்படுத்துவது வெற்றிக்கு வழி வகுப்பதாக இருக்கும்.

❖❖❖❖❖

# தேசியப் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி ....

பிளாஸ்டிக் மேனுஃபாக்சரிங், மெட்டீரியல்ஸ், பாலிமர் சயின்ஸ், காட்/காம் (Cad / CAM), மோல்டிங், மெட்டலார்ஜி, காஸ்டு அக்கவுண்டிங், மற்றும் பிற பொறியியல் படிப்புகளில் பட்டயம், இளங்கலை, முதுகலை பி.எச்டி. பட்டங்கள் வழங்கப்படுகின்றன. மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை.

முகவரி :Central Insitutute of Plastics Engineering and Technology (CIPET), Chennai Web : www.cipet.gov.in

**Central Leather Research Innstitute (CLRI)**

உலகின் மிகப்பெரிய தோல் ஆய்வு நிறுவனங்களுள் ஒன்றான இது 1908ல் உருவாக்கப்பட்டது. தோல் தொழில் நுட்பத்தில் ஃபுட்வேர் சயின்ஸ் & என்ஜினியரிங்கில் பி.டெக் மற்றும் எம்.டெக், எம்.எஸ் (ஆய்வு) மற்றும் பி.எச்டி போன்ற படிப்புகள் இங்கே உள்ளன.

+2 மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு அண்ணா பல்கலைக்கழகம் மாணவர் சேர்க்கையை நடத்தி வருகிறது. இத்துடன் பகுதி நேர பி.டெக் படிப்பும் (பாலிடெக்னிக் மாணவர்களுக்கு) படிப்பும் உள்ளது.

முகவரி : Central Leather Research Institute (Council of Scientific & Industrial Research), Adyar, Chennai 600 020 Web : www.clri.org

**Centre for Advanced Research in Food Technology (CFTRI)**

மத்திய அரசின் சி.எஸ்.ஆர்.ஐ.யின் கீழ் 1950 இல் துவங்கப்பட்ட இந்நிறுவனத்தில் உணவுப் பதப்படுத்தல், உணவுப் பாதுகாப்பு, உணவில் ஊட்டச்சத்துக்களை அதிகரித்தல் போன்ற பிரிவுகளில் படிப்புகள் உள்ளன. குழந்தைகளுக்கான உணவு தயாரிப்பு போன்ற இதன் கண்டுபிடிப்புகள் உலகளவில் புகழ்பெற்றவை.

சயின்ஸ், & ஃபுட் டெக்னாலஜியில் முதுகலைப்படிப்புக்கு அடிப்படைக் கல்வித் தகுதியுடன், நுழைவுத் தேர்வும் உண்டு.

முகவரி : Centre for Advanced Research in Food Technology (CFTRI), Mysore-570020 Web :www.cftri.com

**Centre Marine Fisheries Research Institute (CMFRI)**

கொச்சியில் அமைந்துள்ள இந்தக்கல்வி நிறுவனத்தில் ஃபிஷரீஸ் தொழில்நுட்பத்தில் M.F.Sc., Ph.D., படிப்புகள் உள்ளன.

முகவரி : Central Marine Fisheries Research Institute, Post Box No.1603, Ernakulam North P.O. Kochi - 682 018. Web : www.cmfri.com

நன்றி : மனோரமா இயர்புக் 2011

தொடரும்......

❖❖❖❖❖

# தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சி

1498 – போர்த்துக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை வருதல்

1510 – கோவா போர்த்துக்கீசியர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. (சுதந்திரத்துக்கு முன்பும், பின்பும் கோவா போர்த்துக்கீசியர்களின் தலைமையகமாக இருந்தது.

1522 – சென்னையின் சாந்தோம் பகுதியைப் போர்த்துக்கீசியர்கள் கைப்பற்றினர்.

1526/41 - செஞ்சி நாயக்கர்கள் ஆட்சி

1565 - தலைக்கோட்டைப் போர். இத்துடன் தமிழகத்தில் விஜயநகரப் பேரரசு முடிவுற்றது.

1596 - மதுரை மிஷன் உருவாக்கம்.

1600 - ஆங்கிலக் கிழத்திந்திய கம்பெனி உருவாக்கம்.

1616 - தொப்பூர் போர்

1620 - தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை

1623 - திருமலை நாயக்கர் முடிசூடுதல்

1639 – சென்னைப்ப நாயக்கரிடமிருந்து சென்னைப் பகுதிகள் விலைக்கு வாங்கப்பட்டன.

1640 - ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி குடியிருப்புகளின் தலைமையிடமாக புனித ஜார்ஜ் கோட்டை அறிவிக்கப்பட்டது.

1664 - பிரெஞ்சு மார்ட்டின் என்பவரால் பாண்டிச்சேரி உருவாக்கப்பட்டது.

1676 - தஞ்சாவூரில் வெங்காஜி தலைமையில் மராட்டியர் ஆட்சி

1678 - சத்ரபதி சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றினார்.

1669 - முதல் தமிழ் அச்செழுத்துக்கள் உருவாக்கப்பட்டன.

1681 - கடலூரில் புனித டேவிட் கோட்டை

1686 - புதுக்கோட்டையில் ரகுநாத தொண்டைமான் ஆட்சி

1688 - சென்னை கார்ப்பரேஷன் உருவாக்கம்.

1690 - முதல் கர்நாடக நவாப் கல்பிகர்கான்.

1703-10 - கர்நாடக நவாபின் தலைநகரம் செஞ்சியிலிருந்து ஆர்க்காட்டுக்கு மாற்றப்பட்டது.

1706 - தரங்கம்பாடியில் டேனியர்கள் முதல் தமிழ் அச்சகத்தை உருவாக்கினார்கள்.

1739 - மதுரை நாயக்க வம்ச மகாராணி மீனாட்சி தற்கொலை. இத்துடன் மதுரை நாயக்கராட்சி முடிவுற்றது.

1746 - பிரெஞ்சு ஆர்க்காடு நவாப் படைகளின் அடையாறு போர்.

1746-48 - முதல் கர்நாடகப் போர்
1749 - ஆம்பூர் போர்
1749-54 - இரண்டாம் கர்நாடகப் போர்
**1751** - ராபர்ட் கிளைவ் தலைமையிலான ஆங்கிலப்படைகள் ஆர்க்காட்டை பிடித்தெடுத்தன.
1755 - பிரெஞ்சு ஆங்கிலப் படைகளுக்கிடையே வந்தவாசிப்போர்.
1758-63 - மூன்றாம் கர்நாடகப் போர்
1763 - பாரிஸ் உடன்பாடிக்கையைத் தொடர்ந்து ஆங்கில-பிரெஞ்சு படைகளிடையே அதிகராப் போட்டி முடிவுக்கு வந்தது.
1767 - காப்டன் காம்ப்பெல் பூலித்தேவரை வென்றார்.
1785 - ரிச்சர்டு ஜான்சன் மெட்ராஸ் கொரியர் பத்திரிகையை தொடங்கினார்.
1786 - சென்னையில் முதல் தபால் நிலையம்.
**1801** - சின்னமருதுவின் திருச்சி பிரகடனம் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்படுதல்; ஆர்க்காட்டுப்பகுதிகளை பிரிட்டீஸ் படைகள் பிடித்தெடுத்தன. சென்னை மாகாணம் உருவானது.
**1806** வேலூர் புரட்சி
**1809** சென்னைப் புரட்சி
**1820** சென்னை மாகாணத்தில் ரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
1820-21 சர்தாமஸ் மன்றோ மெட்ராஸ் கவர்னர்
**1824** தஞ்சாவூரில் சரஸ்வதி மகால் நூலகம் உருவாக்கப்பட்டது (இரண்டாம் சரபோஜி)
**1830** இந்து நூலகச் சங்கம் உருவாக்கம்
**1831** முதல் தமிழ் இதழ் தமிழ் பத்திரிகா வெளியானது.
**1835** மெட்ராஸ் கவின் கலைக்கல்லூரி, மெட்ராஸ் மருத்துவக்கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.
**1851** மெட்ராஸ் பிரசிடென்சி கல்லூரி துவக்கம்
**1852** மெட்ராஸ் சுதேசி சங்கம்
**1855** தஞ்சாவூரில் மராட்டியர் ஆட்சி முடிவுக்கு வந்தது
**1856** தமிழ்நாட்டின் முதல் இரயில் பாதை (வாலாஜா-ராயபுரம் இடையே)
**1857** மெட்ராஸ் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
**1862** மெட்ராஸ் உயர்நீதிமன்றம்
**1865** இராமலிங்க அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்கம்.
**1878** தி ஹிந்து பத்திரிகை தொடக்கம்; தமிழின் முதல் நாவல் பிரதாப முதலியார் சரித்திரம் வெளியானது.

❖❖❖❖❖

# உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர்

உலகின் மிகப்பெரிய சாதனைகளில் நாம் 'திருக்குறள்', 'திருவள்ளுவர்' என்பதனை குறிப்பிடலாம். பைபிள், குரான் போன்ற மத வேத நூலைத் தவிர்த்து, மிக வேகமாக பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நீதி நூல் திருக்குறள். இது 'உலகப் பொதுமுறை' என்று பலராலும், ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலம், இடம், நாடு, மதம், இனம் கடந்து, மனித குலத்திற்கே பொதுவான நீதி கூறும் அற்புத நூல் இது. அறநூல், வாழ்வியல் நெறிகூறும் அற்புத நூல். 2000 ஆண்டுகளாக அழியாது புகழ்பெறும் அற்புத நூல்.

இது தமிழ்மொழியில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நூல். மிகக்குறுகிய அடிகள் கொண்ட நூல் இது. இரண்டே வரியில், அற்புத நீதிகளை மிக அழகாகக் கூறுவது இதன் சிறப்பு. குறுகிய அடிகளால் ஆன, வெண்பா அமைப்பில் இது எழுதப்பட்டது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட சிறப்புடையது இந்நூல். அதோடு அதிகாரம் என்று 133 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு அதிகாரத்திற்கு 10 பாடல்கள் வீதம் மொத்தம் 1330 குறட்பாக்களைக் கொண்டது.

கடவுள் வாழ்த்து, இல்லறம், துறவறம் என பல பிரிவுகள் கொண்டது. இதனை எழுதியவர் திருவள்ளுவர். இவரது காலம் கி.பி. முதல் நூற்றாண்டு எனக்கொள்ளலாம். பொதுவாக மிகச்சரியாக சொல்லக்கூடிய வரலாற்றுக்குறிப்புகள் கிடைக்கவில்லை.

இவர் தமிழர். சென்னையை அடுத்த மயிலாப்பூர் என்ற ஊரில் வசித்தவர். நெசவுத்தொழில் செய்து வந்தார். இவரது பெற்றோர் ஆதி–பகவன். மனைவி வாசுகி என்பார்கள். மற்றபடி இவரது வாழ்வைப் பற்றியவை செவிவழிக்கதைகளே.

தெய்வப்புலவர், செந்நாப்புலவர் என்று பலவாறு புகழப்படும் அற்புதக் கவிஞர் இவர். தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்தவர். வாழ்வியல் நீதி, பல புரட்சிக் கருத்துக்கள், அரசியல் முறை, இன்பத்துப்பால் காதல் உணர்வுகள் என மிகவும் போற்றப்படும் நூலாக இது உள்ளது.

'அகர முதல எழுத்தெல்லாம்' ஆதிபகவன் முதற்றே உலகு என்பது இறைவன் பற்றிய இவரது முதல் கருத்து. இதுவே குறளின் முதல் குறள். எழுத்துக்களுக்கு 'அ' முதன்மை. உலகுக்கு முதன்மை இறைவன் என்று கூறிடும் கடவுட் கொள்கை இவரின் கொள்கை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது இவர் வாழ்வின் நீதி. இந்த உலகில் வாழும் முறைப்படி வாழ்கிறவன். (மனிதன்)

வான் உலகில் வாழ்கிற கடவுளாகவே வாழ முடியும் என்பது இவர் தத்துவம்.

'கல்வி கண் போன்றது', 'ஒழுக்கம் உயிரினும் மேலானது', 'எதைக் காக்காவிடினும் நாகாக்க', கல்வியே செல்வம், கற்றபடி நடக்க என்றெல்லாம் அழகான நீதிகளை குறள் வரி அற்புதமாய் விளக்குகிறது.

கடுகைத் துளைத்து அதில் ஏழு கடலைப் புகட்டியது போல இக்குறட்பாக்கள் இருப்பதாகவும், அணுவை துளைத்து அதில் ஏழு கடலைப்புகட்டியது போல என்றும் இந்நூலைப் பலர் புகழ்வார்கள்.

ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, லத்தீன் என பல உலக மொழிகளில் இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

"உலகம் பழிக்கின்ற செயலை விட்டால் போதும்; மொட்டை, தாடி போன்ற புறவேஷம் வேண்டாம் என்ற புரட்சிக் கருத்தும் இவரின் சிறப்பாகும்.

எப்பொருள் யார் வாய் கேட்டாலும், அப்பொருளின் உண்மைப்பொருள் அறிவதே அறிவு என்ற இவர் கருத்து, சாக்ரட்டீஸ் தத்துவத்தோடு ஒத்துப்போகிற கருத்தாகும். இன்னா செய்தார்க்கும் நன்மை செய் என்கிற இவரின் கருத்து இயேசுநாதரின் போதனைக்கு ஈடானது எனலாம்.

தமிழ்நாட்டில், தமிழக அரசு இவருக்கு நினைவிடமாக வள்ளுவர் கோட்டம் என்ற ஓர் இடத்தை அமைத்துள்ளது. மயிலாப்பூரில் இவருக்கு ஓர் ஆலயம் (திருவள்ளுவர் ஆலயம்) உள்ளது. தற்போது கன்னியாகுமரியில் இவருக்கு 133 அடி உயர மிகப்பெரிய சிலை வைக்கப்பட்டுள்ளது. திருக்குறள் எல்லா வகுப்பு தமிழ் பாடநூலிலும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து - வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றும், 'வள்ளுவன்போல் புலவன் வேறு எங்கும் இல்லை' என்றும் பாரதியால் பாராட்டப்பட்டவர் திருவள்ளுவர்.

இதுபற்றி பல ஆயிரம் நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பரிமேலழகர் உரை செய்த நூல் இது. மேலும் தற்காலத்தில் பலராலும் உரை எழுதப்பட்ட நூல் இது. இந்நூலுக்கே மிக அதிகமான உரைநூலும், விளக்க நூலும் எழுதப்பட்டு வருகின்றன. இதுவே வள்ளுவரின் வரலாற்றுச் சிறப்புக்கு மிகப்பெரிய சான்றாகும்.

(கமலா கந்தசாமி எழுதிய 'உலக சரித்திரம் படைத்த சாதனையாளர்கள்' என்ற நூலிலிருந்து.)

❖❖❖❖❖

## வாழைத்தண்டு கூட்டு

**தேவையான பொருள்கள் :–**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாழைத்தண்டு | - | 1(சிறியது) | தேங்காய் துருவல் | - | 4 ஸ்பூன் |
| பாசிப்பருப்பு | - | 100 கிராம் | உப்பு | - | தேவைக்கு ஏற்ப |
| சாம்பார்ப் பொடி | - | 1ஸ்பூன் | மஞ்சள் தூள் | - | ½ ஸ்பூன் |
| சின்ன வெங்காயம் | - | 25 கிராம் | எண்ணெய் | - | 2 ஸ்பூன் |
| | | | பட்டை கிராம்பு | - | தலா 2 |

**செய்முறை :–**

. பாசிப்பருப்பை வாணலியில் போட்டு வறுத்துக்கொள்ளவும்.

. குக்கரில் வறுத்த பாசிப்பருப்பு, வெங்காயம், தக்காளி, பொடியாக நறுக்கப்பட்ட வாழைத்தண்டு, சாம்பார்ப்பொடி 1 ஸ்பூன், தேவையான அளவு உப்பு, மஞ்சள் தூள் இவற்றுள் 3 டம்ளர் தண்ணீர் விட்டு 3 விசில் வரும் வரை வேக விடவும்.


. ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் சூடானதும் பட்டை, கிராம்பு, கறிவேப்பிலை ஆகியவற்றைப் போடவும்.

. பட்டை, கிராம்பு பொரிந்தவுடன் வேகவைத்த வாழைத்தண்டுக் கலவையை ஊற்றவும். கொதிக்க விடவும். நன்கு கொதிவந்தபின் தேங்காய்த் துருவலைப்போட்டு இறக்கவும்.

. வாழைத்தண்டு கூட்டு தயார். இதைச் சாதத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் ருசியாக இருக்கும்.

❖❖❖❖❖

## வருந்துகிறோம்



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியைச் சேர்ந்தவரும், முன்னாள் பேரூராட்சித் தலைவர் அமரர் உயர்திரு. பா.து.இராசன் அவர்களின் துணைவியாரும், PDR கல்வி நிறுவனங்களின் தலைவர் மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையக்குழு முன்னாள் உறுப்பினருமான திரு. இரா.தமிழ்மணி, தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் மற்றும் பேராசிரியர் டாக்டர் இரா. குமாரராஜ், மத்தியஅரசின் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் அமரர் திரு.இரா.மோகன் ஆகியோரின் தாயாருமான திருமதி வெள்ளச்சியம்மாள் அவர்கள் 05-05-2011 அன்று பாப்பிரெட்டிப்பட்டியில் இயற்கையடைந்தார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஊராரும், உற்றாரும் போற்ற வாழ்வாங்கு வாழ்ந்த திருமதி வெள்ளச்சியம்மாள் அவர்களின் மறைவுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அம்மையாரின் மறைவால் துயருற்றிருக்கும் திரு. இரா. தமிழ்மணி, டாக்டர். இரா.குமாரராஜ் மற்றும் குடும்பத்தார்க்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# மீனவர் மொழி

தகத் தகாயமாய் ஆதவன்
தங்கத் தகடென
வானில் உதித்தெழ
வானம் கதிரவனை வணங்கிஏற்றது
விழித்தெழுங்கள் சோதரரே
எழுந்து புறப்படுங்கள்
இரவு முழுதும் அழுதிருந்த
இளம்பிள்ளை தன்தாயின் தோளில்
உறங்கிக் கிடப்பது போல
உதயத்தில் காற்று உறங்குகிறது
கரையில் விரிந்து பரந்து
கிடந்திருக்கும் விலையினை எடுத்து
கட்டு மரத்திலேறி தடுப்பு வீசி
கடலினுள் பாய்ந்து செல்வோம்
அலைகளின் செல்வமாம்
அலைந்தோடும் மீனினம் நோக்கி
வலைவிளை வீசிக் காத்திருந்து
விழுகின்ற மீன்களை அள்ளிமகிழ்வோம்
நாம் கடலின் பிள்ளைகள்
நமக்குப் பயமொன்றுமில்லை
கடல் பறவைகள் குரல் கேட்கும்
இடம் நாடிப் பயணிப்போம்
கடல் நமது அன்னை
கருமேகங்கள் சோதரர்கள்
ஓய்வறியா கடலலைகள் நமது
ஒப்பற்ற தோழர்களாம்
எல்லையில்லாப் பெருங்கடலில்
பல்வேறு அரசினர்
எல்லைக் கோடுகள் திட்டமிட்டு
வரைந்திருப்பது அறியாமல்
இட்டமுடன் நாம் வெகுளியாய்
கட்டு மரமேறிக் திரிந்திருக்க
பகைவர் கூட்டமெனக் கருதி
புகைக்கும் துப்பாக்கியால் நமைச்சுடுவார்
கட்டிப்போட்டு நம்மை
கடுஞ்சிறையில் அடைப்பார்
அண்டை நாட்டினர் சின்னேரம்
அதற்கெல்லாம் அஞ்சல் வேண்டாம்
நம் அரசும் படை வீரரும்
நம்மைக் கருணையுடன் சிறைமீட்பார்
காத்திருக்கும் மனைவியரும் உறவும்
பார்த்திந்து விழிமூடாது
செய்திருக்கும் பிரார்த்தனைகளை
செவிசாய்த்து இறைவனும்
சேர்த்திணைத்துக் காத்திடுவான்
சோர்ந்திருப்பது என்ன விதம் ?
தென்னையிளம் சோலைகளும்
தீஞ்சுவை பழத்தோப்புகளும்
வீசும் வெண்ணிலவின் ஒளியில்
தேசுலாவும் மணல் வெளியும்
கரையில் வாழ் மக்கள்
கவிண்மிகு வாழ்வும் அழகுதான்
கரையில் இருக்கும் வரையே
அலைகள் வருதலும் போதலும்
கடலினுள் சென்றுவிட்டால்
கரையுமில்லை அலையுமில்லை
இங்கு வீசுகின்ற அலைகளின்
நீர்த்திவலைகளும் வெண் நுரைகளும்
நாம் சிரித்து மகிழ்ந்திட
நமது கடலைத் தீண்டி முத்தமிடும்
இனிமையை மறக்கலாமோ
இதுவே இறைவன் சன்னதி
பொன் ததும்பும் அந்திநேரம்
கோல நிலா வந்ததிங்கே
வானத்தின் எல்லைக் கோட்டினை
வீசுகின்ற அலைகள் சென்றணைக்கும்
அலைகளின் இடையிடையே
ஆர்ப்பரித்துப் பளபளக்கும் மீனினம்
நிலவாடும் மாளிகைகள்
நெல்லாடும் வயல் வெளிகள்
இறைவன் நமக்களித்த செல்வமிது
இனியென்ன தயக்கம்? வீசுங்கள் வலைகளை
கணங்களிலிருந்து நழுவியோடும் மீன்களை
வரமாகக்கொண்டு வாரியெடுத்திடுக
வாழ்வாதாரம் இதுவன்றோ
வாருங்கள் சகோதரர்கள்

- கவிஞர் மனோன்மணி மாணிக்கவாசகம்

# கொங்கு திருமண மாலை

மணமகன் தேவை :-

1. பொருள்தந்த குலம், 27 வயது, படிப்பு BE., MS., சென்னையில் தனியார் நிறுவனவேலை. 5'6'' சிகப்பு, கிருத்திகை 4, ரிஷபராசி, 8ல் செவ், 1 தங்கை, சங்ககிரி பூர்வீகம், தந்தை சென்னையில் தனியார் நிறுவன இயக்குனர், நல்ல உத்யோகம் உள்ள அல்லது சொந்தத் தொழில் செய்யும், நல்ல படிப்புள்ள மணமகன் தேவை, சென்னை நகரப் குடும்பம் முன்னுரிமை

2. மணியன் குலம், 24வயது, படிப்பு MBA., உயரம் 5'5'' சித்திரை கன்னிராசி, செவ்வாய் இல்லை, ஒரே பெண், பூர்வீகம், ஈரோடு, தந்தை, சென்னையில் அரசு உயர் அதிகாரி. பெண்ணுக்கு நல்ல படிப்புள்ள, தகுதியான மணமகன் தேவை.

3. மறுமணத்திற்குப்பெண் தேவை

கண்ணந்தை குலம், வயது 35 படிப்பு, DME., சென்னையில் சொந்தமாக லாரி போக்துத்வரத் தொழில், புனர்பூசம், மிதுனராசி, செவ்வாய், இல்லை, 1 தம்பி, USA வில் சாப்ட்வேர் இஞ்சினியராக உள்ளார். தந்தை ஓய்வு பெற்ற அரசு அதிகாரி, 30 வயது மிகாத படித்த மறுமணத்திற்குத்தகுதியான பெண் தேவை.

தொடர்புக்கு : டி.கே.சுப்ரமணியன்
60, மேகசின் சாலை, (பட்ரோடு, பரங்கிமலை, சென்னை - 600 016
போன் : 044-22311411, 9840364348

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்

திரு.வெ.இரத்தின சபாபதி அவர்கள் பொள்ளாச்சியில் 02-01-1955 அன்று வெங்கடாசலம், தெய்வானை அம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். 56 வயதான இவர் பி.எஸ்சி., பி.எட்., எம்.பி.ஏ.பட்டம் பெற்றவர். காடை குலத்தைச் சேர்ந்த திரு. இரத்தினசபாபதி, சேவை மனப்பான்மையும் மனிதநேயமும், சமுதாய உணர்வும் நிரம்பப்பெற்றவர்.

தற்போது அவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணய உறுப்பினராகத் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

காவல் துறையில் மாவட்டக் கண்காணிப்பாளராகப்பணியாற்றியவர். காவல் துறையில் அவரின் மேலான உயிர் காக்கும் சேவைக்காக பாரதப் பிரதமரின் பதக்கம் பெற்றுச் சிறப்படைந்தவர். உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதி மன்றங்களில் அவர் நேர்மையான அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட சிறந்த அதிகாரி என்ற பாராட்டுப்பதிவு பெற்றவர். திரு. இரத்தின சபாபதி– திருமதி சக்தி தம்பதிக்கு இரண்டுபெண் குழந்தைகள் உள்ளன. மூத்த மகளுக்குத் திருமணமாகிவிட்டது.

இளையமகள் கணிப்பொறியாளராகப் பணியாற்றுகிறார்.

திரு. இரத்தினசபாபதி அவர்களால் கொங்கு வேளாண் குடிக்குப் பெருமையும், சிறப்பும் கிடைப்பது உறுதி. சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அன்னாருக்கு இதய பூர்வமான வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# ஏழை எளிய விவசாயிகளுக்கு ஏற்றது ஆடுதுறை 37 நெல் ரகம்

எஸ்.எஸ்.நாகராஜன்

கடும் இடர்பாடுகளில் நெல் சாகுபடி செய்யும் இடங்களில் ஆடுதுறை 37 ரகத்தினை சாகுபடி செய்யலாம். வெப்ப சூழ்நிலை மற்றும் கரம்பு நிறைந்திருக்கும் சூழ்நிலையில் ஆடுதுறை 37 ரகம் செழிப்பாக வளர்வதைப்பார்த்தால் நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். வறட்சியில் வளர்ந்தாலும் அதிகமாக வளர்ந்து வைக்கோல் மகசூலினை அதிக அளவில் கொடுக்கின்றது. வைக்கோலினை எருது மாடுகள் விரும்பி உண்ணுகின்றன. அதேபோன்று விவசாயத்தில் வேலை செய்து பிழைத்து வரும் ஆட்கள் ஆடுதுறை 37 ரகத்தின் அரிசியினை அதிகம் வாங்கி சமைத்து சாப்பிடுகிறார்கள். நெல் அறவையில் உடைவதில்லை. ஏழை மக்கள் ஆடுதுறை 37 அரிசியை விரும்புவதற்கு முக்கிய காரணம் யாதெனில் இதன் பழைய சோறு கெட்டுவிடாமல் இருப்பதேயாகும். ஆடுதுறை 37 வைத்தில் புழுங்கல் அரிசி இட்லி செய்வதற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. ஏற்கனவே கூறியது போல் ஆடுதுறை 37 ரகத்தில் ரவக்கோல் அதிகமாக கிடைப்பது போல் நெல் மகசூலும் கணிசமான அளவில் கிடைக்கின்றது. ஆடுதுறை 36 போன்ற ரகத்தில் ஏக்கரில் 200 பிரி அல்லது அரை வண்டி வைக்கோல் கிடைக்கும் போது 37 ரகத்தில் 400 பிரி அல்லது ஒரு வண்டி வைக்கோல் கிடைக்கின்றது. பல இடங்களில் 108 நாட்கள் வயதுடைய ஆடுதுறை 37 ரகத்தை தவறுதலாக பொண்மணி யென்று அழைக்கின்றனர். தமிழ்நாட்டில் ஆடுதுறை 37 ரகத்தைப்போலவே "பொன்மணி" என்ற ரகம் உள்ளது. இதன் நெல்லும் குண்டாகவும் பருமனாகவும் இருக்கும். இதன் நெல்லும் மோட்டாவாக இருக்கும். பொன்மணி அதாவது சி.ஆர் 1009 ரகம் நீண்ட கால ரகம். வயது சுமார் 5½ மாதங்கள் இருக்கும். விவசாயிகள் 108 நாட்கள் வயதுடைய ஆடுதுறை 37 ரகத்தையே விரும்புகின்றனர்.

**சாகுபடி முறைகள் :–**

ஆடுதுறை 37 ரகத்தில் விதைத் தூக்கம் உள்ளது. (சீட் டார்மனிசி) ஆடுதுறை 37 ரகத்தை வைகாசி பின் பகுதியில் நாற்று விட்டு ஆனியில் நாற்றுக்களை வயலில் நடலாம். ஆடுதுறை 37 ரகத்தில் விதைத் தூக்கம் (சேற்றில் விதையைப் போட்டால் கொஞ்ச நாள் அது முளைக்காமல் இருக்கும்) உள்ளதால் விவசாயி விதையளவினை அதிகமாக உபயோகிக்க வேண்டும். விதையை திரம் மருந்துடன் விதை நேர்த்தி செய்த பின் தண்ணீர் தொட்டியில் கொட்ட வேண்டும். தண்ணீரில் மிதக்கும் பதர் நெல் குதிரைவால் களைச்செடிகளின் விதைகள் ஆகியவற்றை களைந்து எடுத்துவிட்டு

விதையை ஊறப்போட வேண்டும். மூன்றாம் கொம்பு விதையாக விதைக்கப்பட வேண்டும். நாற்றாங்காலுக்கு எருக்கந்தழை போட்டும் சால் கலப்பை உழவும், 4 சால்பட்லர் ஓட்டியும் உழவின்போது 8 கிலோ டிஏபி உரமும் போட வேண்டும். நடவு வயலில் அதிர்ஷ்டவசமாக முன்னால் சாகுபடி செய்யப்பட்டிருந்த வேர்க்கடலை உலர்ந்த செடிகள் இருந்தால் 6 சால் கலப்பை உழவு செய்து வேர்க்கடலை செத்தையை பூமியில் அழுத்தப்படவேண்டும். பிறகு 2 சால் பட்லர் உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது காம்ப்ளக்ஸ் உரம் 17:17:17 ஏக்கருக்கு 2 மூட்டைகள் இட வேண்டும். மேலும் வயலுக்கு ½ மூட்டை யூரியா இடலாம். பிறகு 30-34 நாட்கள் வயதுடைய நாற்றுகள் குத்துக்கு இரண்டு நாற்றுகள் வீதம் நடப்பட வேண்டும். நாற்றினை நடுவதற்கு முன்பு வயலில் பொடி செய்யப்பட்ட 10 கிலோ ஜிங்க் சல்பேட் தூவப்பட வேண்டும். நடவு செய்த 3 ஆம் நாள் ஏக்கருக்கு 1 லிட்டர் வீதம் களைக்கொல்லி (சார்ட்டர்ன்) இட வேண்டும். பயிருக்கு மண் பரிசோதனைபடி உரங்கள் இட வேண்டும். உதாரணமாக உரங்கள் கீழ்க்கண்டபடி இடலாம். நடவு நட்ட 10 ஆம் நாள் 10 கிலோ யூரியா + 5கிலோ வேப்பம் பிண்ணாக்கு இடலாம். நடவு நட்ட 17 ஆம் நாள் 10 கிலோ யூரியா+5 கிலோ வேப்பம் பிண்ணாக்கு இடலாம். நடவு நட்ட 20 ஆம் நாள் ஒரு களை +10 கிலோ யூரியா +15 கிலோ பொட்டாஷ் இடலாம். நடவு நட்ட 40 ஆம் நாள் 20 கிலோ யூரியா +5 கிலோ பொட்டாஷ் இடலாம்.

இதன் சாகுபடியில் பொதுவாக பெரிய பூச்சி வியாதி பிரச்சினைகள் வந்ததில்லை எப்படி இருப்பினும் ஆடுதுறை 37 ரக சாகுபடியில் கட்டுரையில் காட்டப்பட்டுள்ள நிகர லாபத்தை விடக் கடும் சரிவு ஏற்படாது. இதனால்தான் ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகள் இந்த ரகத்தினை விரும்புகின்றார்கள். அறுவடை, பயிர் நட்ட 87 வது நாள் செய்யப்பட வேண்டும்.

**பொருளாதாரம் :–**

| | | |
|---|---|---|
| மகசூல் மூட்டை (75 கிலோ) ஏக்கருக்கு | - | ரூ. 18,000.00 |
| 30 மூட்டை மதிப்பு x ரூ. 600) | | |
| வைக்கோல் | - | ரூ. 10,000.00 |
| மொத்த வரவு | - | ரூ. 19,000.00 |
| சாகுபடி செலவு | - | ரூ. 12,000.00 |
| நிகர லாபம் | - | ரூ. 7,000.00 |

**விவசாயிகள் கவனிக்க :–**

ஆடுதுறை 37 ரகம் கோடைப்பட்டத்திற்கு ஏற்ற ரகம். பலவித சிறப்பியல்புகளைக் கொண்டது. பாடுபட்டு உழைத்தால், ஏக்கரில் ரூ. 7,000 வரை லாபம் எடுக்கலாம்.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



சென்னை கொங்கு நண்பர்கள் சங்க முன்னாள் தலைவரும், கொங்கு சங்கங்கள் கூட்டமைப்பின் தலைவருமான திரு. கே.சி. காளியண்ணன் – திருமதி வேதநாயகி காளியண்ணன் ஆகியோரின் மூத்த குமாரன் திருவளர்ச்செல்வன் K.K. ரத்னபிரசாத், தருமபுரி மாவட்டம் அமரர் அரூர் R. முத்துக் கவுண்டர் Ex.M.P. - திருமதி பிரேமா ஆகியோர் பேரனும், அம்மன் கிரானைட் நிறுவனங்களின் தலைவர் திரு. M. ராமசாமி – திருமதி சாந்தி ராமசாமி ஆகியோரின் இளைய மகள் திருவளர்ச்செல்வி R. வைஷ்ணவி ஆகியோர் திருமணம் அரூர் முத்துக் கவுண்டர் தோட்டத்தில் 23–05.2011 திங்கட்கிழமை தமிழ் மணம் கழக, மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக 22–05–2011 ஞாயிற்றுக்கிழமை மாலை மணமகள் இல்லத்தில் திருமண நிச்சயதார்த்த விழா நடைபெற்றது.

24–05–2011 செவ்வாய்க்கிழமை காலை அரூர் N.N. மஹாலிலும், 27–05–2011 வெள்ளிக்கிழமை அன்று காலை கோபி சீதா திருமண மண்டபத்திலும் திருமண வரவேற்பு விழாக்கள் சீரும், சிறப்புமாக நடைபெற்றன.

இந்நாள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், கொங்குச் சமுதாய தலைவர்கள், கொங்கு சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகள், இராசிபுரம் கொங்கு நாட்டு வேளாளர் அறக் கட்டளை நிர்வாகிகள், தொழிலதிபர்கள், தமிழக அரசு உயர் அலுவலர்கள், அம்மன் கிரானைட்ஸ் நிறுவனங்களின் அலுவலர்கள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை நிர்வாகிகள் உட்பட ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் மேற்கண்ட திருமண விழாக்களில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

திருமண விழாக்களில் கலந்து கொண்ட அனைவரையும் திரு. M.ராமசாமி, திருமதி சாந்தி ராமசாமி, திரு. K.C.காளியண்ணன், திருமதி வேதநாயகி காளியண்ணன், திரு.விசி.பெருமாள் IPS (Retd), திருமதி இளங்கனி பெருமாள், திரு. G. அருண், திருமதி பார்கவி அருண், திரு. அஸ்வின் முத்து, திரு. கே.கே. தீபக் முதலானோர் வரவேற்று உபசரித்தனர்.

மணமக்கள் திரு. K.K. ரத்ன பிரசாத் – திருமதி வைஷ்ணவி எல்லா வளங்களும் பெற்று சிறப்புடன் வாழ்ந்திட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖❖

# நூல்நயம்

நூல் தலைப்பு : வணங்காமுடி வாழ்க்கை

ஆசிரியர் : செ. நல்லசாமி

வெளியீடு : கோவை செழியனார் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டுக் குழு **(98940 99955)**

"வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்?
மாபெரும் வீரர் மானம் காத்தோர்
சரித்திரம் தனியே நிற்கின்றார்"

கவிஞர் கண்ணதாசனின் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வரிகள் அவருடைய நெருங்கிய நண்பராக இருந்த கொங்கு நாட்டுப் போராளி கோவை செழியன் அவர்களுக்கு மிகவும் பொருந்துகிறது என்றால் அது மிகையல்ல. வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு நல்லவரைப் பற்றி, வல்லவரைப்பற்றி, வாழும் தலைமுறையினருக்கும், வரும் தலைமுறையினருக்கும் வழிகாட்டும் விதத்தில் திரு. செ.நல்லசாமி அவர்களால் மிக அருமையாக படைக்கப்பட்டிருக்கும் நூல் 'வணங்காமுடி வாழ்க்கை'

அமரர் கோவை செழியன் அவர்களோடு **30** ஆண்டு காலம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் திரு. செ.நல்லசாமி. "கொங்கு வேளாளர் சமுதாயத்தில் என்றும் நிலைத்து நிற்கும் புகழுக்குச் சொந்தக்காரராக கோவை செழியன் அவர்களின் வாழ்க்கை அமைந்துவிட்டது. பூர்வீகச் சொத்துகளை எல்லாம் புறந்தள்ளிவிட்டு, பொதுவாழ்க்கையில் நுழைந்து ஏழை, எளிய மக்களோடு இரண்டறக் கலந்துவிட்டார் கோவை செழியன். 'அவர் மறைந்தபோது அவருடைய சொந்தங்கள் சிந்திய கண்ணீரைவிட அவரை நேசித்தவர்கள் சிந்திய கண்ணீரே அதிகம்" என்று கூறும் திரு. செ.நல்லசாமி அந்த மாமனிதருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, அந்த கொங்கு நாட்டுச் சிங்கத்தின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை ஆவணப்படுத்தி, இந்த வாழ்க்கை வரலாற்று நூலை 'வணங்காமுடி வாழ்க்கை' என்ற கருத்தாழமிக்க அழகிய தலைப்பைச் சூட்டி உருவாக்கியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம், குங்காருபாளையம் கிராமத்தைச் சேர்ந்த செல்லமுத்துக் கவுண்டர் திருமதி பாப்பம்மாள் தம்பதியருக்கு **29–12–1931** அன்று மகனாகப் பிறந்து, **14–03–2000** அன்று மறைந்த திரு. கோவை செழியன் இம்மண்ணில் **69** ஆண்டுகள் நிறைவான புகழுக்குரிய வாழ்க்கை வாழ்ந்தார்.

எம்.ஏ. (அரசியல்) , எம்.ஏ. (பொது நிர்வாகம்) பட்டங்கள் பெற்றவர் திரு. கோவை செழியன். வள்ளுவருக்கு வாசுகிபோல் இவருக்கு மனைவியாக அமைந்தவர் திருமதி கமலம்

செழியன். செம்பியன் சிவகுமார், திருமதி மாதவி வெங்கடேஷ், திருமதி வாசுகி வசீகரன், கபிலன் ஆகிய நன்மக்கள் பேற்றைப் பெற்றவர் இத்தம்பதியர்.

திரைப்படத் தயாரிப்பு, அரசியல், பொதுவாழ்க்கை, சமுதாய சேவை மற்றும் வேளாண்மை துறைகளில் ஈடுபட்டிருந்த கோவை செழியன் அவர்கள் திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்ததோடு தமிழக சட்டப் பேரவை உறுப்பினராகவும், மாநில திட்டக் குழு. துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றியவர். பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களின் பேரன்பைப் பெற்றவர் கொங்கு வேளாளர் சமுதாயம் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்.

'பள்ளிப்படிப்பு முதல் இறக்கும்வரை அரசியல், பொது வாழ்க்கையில் ஈடுபட்டு கொங்கு இன மக்களைக் கட்டிக் காத்துத் தலைவனாக இருந்து வழிநடத்தியவர் திரு. கோவை செழியன்' என்று குறிப்பிடும் திரு. செ. நல்லசாமி இந்த நூலின் பின்பக்க அட்டையில் பாம்பு போல் வளைந்து நெளிந்து மிக நன்றாக வளர்ந்துவிட்ட ஒரு தென்னை மரத்தின் படத்தை அச்சிட்டு "இந்த மரம் போல் வளைந்து நெளிந்து பிழைக்க மறுத்த மாமனிதன் வணங்காமுடிச் சேரன் கோவை செழியன்" என்றும் குறிப்பிடுகிறார்.

வளரும் கொங்கு சமுதாய வரலாறாகவும், வளநாட்டில் உருவான இயக்கங்களின் வரலாறாகவும் இந்நூலை அழகுற வடிவமைத்துள்ளார், திரு.செ. நல்லசாமி. "கோவை செழியன் அவர்களின் வாழ்க்கை ஒரு பொங்கு மாக்கடல். அதை இந்தப் புத்தகப் புல்லாங் குழலின் பொத்தல்களில் வடித்து எடுத்துவிட முடியாது. அதிகாலையில் ஆழ்கடலில் உதிக்கும் சூரியனுக்குக் கற்பூர ஆரத்தி காட்டுவதைப் போன்றதாகும் இந்த முயற்சி" என்று தனக்கேயுரிய தன்டைகத்துடன் கூறுகிறார் கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவரும், தமிழ்நாடு கள் இயக்கத் தலைவருமான இந்நூலாசிரியர் திரு. செ.நல்லசாமி.

ஆழகிய, எளிய, இனிய நடை; ஆங்காங்கு பொருத்தமான இடங்களில் வாழ்க்கைக்கு வழிக்காட்டும் வள்ளுவர் பெருமானின் குறள்கள், நீதிபோதிக்கும் சிறுகதைகள், யதார்ந்த வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சீறல்கள், கவிஞர் கண்ணதாசனின் தத்துவப் பாடல்வரிகள், கோவை செழியன் அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சந்தித்த சவால்கள் போன்றவை இந்நூல் முழுவதும் இருப்பது சிறப்பு.

கோவை செழியன் அவர்களின் புகழுக்குப் புகழ் சேர்த்துள்ள இந்நூலைப் படைத்துள்ள ஆசிரியர் செ. வேலுசாமி அவர்கள் பாராட்டுக்குரியவர்.

முனைவர் மணிமேகலைபுஷ்பராஜ்
செயற்குழு உறுப்பினர்.

❖❖❖❖❖